இலங்கை மன்றம் - 2024

---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை மன்றத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, மன்றத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, மன்றத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும்

அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இலங்கை மன்றத்தியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவணையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- மன்றத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு மன்றத்தின் உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- மன்றத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- மன்றத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் குறித்தொதுக்கப்பட்ட அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களுக்கு மாத்திரம் அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள்

காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு ''முறையாக திட்டமிடப்பட்ட'' உள்ளகக் கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை சபையினால் பேணிச் செல்லல் அவசியமாகவுள்ளது.

1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	ரூபா 2,754,664 தொகைக்கான பெறுமதி கூட்டிய வரி மற்றும் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டம் ஒன்றிற்கான ரூபா 1,489,044 இற்கான ஏற்பாடுகள் நடைமுறை வேலைக் கணக்குகளில் உட்படுத்தப்பட்டிருந்தமையால், நடைமுறை வேலை மற்றும் அட்டுறுச் செலவுகள் ரூபா 4,243,708 தொகையினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.	நடைமுறை வேலையில் உட்படுத்தப்பட்டிருந்த குறிப்பிட்ட ஒப்பந்த வேலையின் பெறுமதி மற்றும் பெறுமதி கூட்டிய வரியினை பரிசோதனை செய்து தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என.	நடைமுறை வேலைகள் மற்றும் அட்டுறுச் செலவுகள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ஆ)	வங்கிக்கு நேரடியாக கிடைத்திருந்த வைப்புக்கள் ரூபா 1,594,171 தொகை அறுதியாக இனங்கண்டு கணக்கீடு செய்யாமல் முன்பணம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	மேல் செலவு வைத்தல் தொடர்பான தகவல்கள் கிடைக்கப் பெறாத வைப்புகளுக்காக சரி செய்தல் மேற்கொள்ளப்படும் என.	நேர் வைப்புக்களை இனங்கண்டு சரியாக கணக்கீடு செய்ய வேண்டும்.

1.5.3 தொங்கல் கணக்குகள்

விடயம்	தொகை	தொங்கல் என காட்டப்பட்டிருந்த காலம்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
தொங்கல் கணக்கு	ரூபா 189,587	2015 - 2024	நி.பி. 104 விரசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், அதன் பரிந்துரையின் மீது தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என.	தொங்கல் கணக்கு மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.6.1 பெற வேண்டிய தொகை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2010 ஆண்டு முதல் 2019 ஆண்டு வரை 05 வருடங்களுக்கு மிகையான காலம் மன்றத்தினால் நடாத்தப்பட்டிருந்த கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயலமர்வுகள் தொடர்பாக பல்வேறு	நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என.	நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்வதற்கு

	நிறுவனங்களிலிந்து பெற வேண்டிய ரூபா 2,722,427 தொகையினை அறவீடு செய்தவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.		நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	2014 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை தொழில் அபிவிருத்திப் பிரிவினால் வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்ட சேவைகளுக்காக அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 895,437 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	2014 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை பெற வேண்டிய ரூபா 895,437 இற்கான தொகையினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்த போதிலும், அதற்கான பதில் கிடைத்திருக்கவில்லை என.	நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	மன்றத்தின் இலக்கம் 123 கொண்ட peo TV அலைவரிசை, திரைக்கூடம், நிருவாக வளாகம், உற்பத்தி உபகரணங்கள் மற்றும் குறிப்பிட்ட சேவைகள் வாடகை அடிப்படையில் வழங்குவது தொடர்பாக 2022 பெப்ரவரி மாதம் 10 திகதி தனியார் கம்பனியொன்றுடன் உடன்படிக்கையொன்றுக்கு அணுகியிருந்தது. அந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனை இலக்கம் 4, 5, 7 மற்றும் 8 இன் படி முறையே அலுவலக வாளகத்தை பயன்படுத்துவதற்காக மாதாந்தம் ரூபா 285,000 இற்கான வாடகை செலுத்துவதற்கும், TV அலைவரிசையின் குத்தகை வருடாந்தம் 10% இனால் அதிகரிக்கும் அடிப்படையில் ரூபா 500,000 இற்கான குத்தகையொன்று செலுத்துவதற்கும் அலைவரிசையின் நிகழ்ச்சித் திட்டங்கள் ஒளிபரப்புவதற்காக மேற்கொள்ளப்பட்ட அனைத்து செலவுகளான உற்பத்திச் செலவுகள் TV அலைவரிசைச் செலவில் அடங்கக்கூடிய தொலைபேசி மற்றும் இணைய தள வசதிகள், அதன் பயன்பாட்டில் அடங்கிய குத்தகை மற்றும் கட்டணம் செலுத்துவதற்கும், மின்சார நுகர்வுக்காக செலுத்த வேண்டிய கட்டணம் ஆகியவை உடன்படிக்கையின் படி செலுத்துவதற்கான கடப்பாடு காணப்பட்ட போதிலும், 2022 ஆண்டிற்காக ரூபா 1,217,696 தொகையும், 2023 ஆண்டிற்காக ரூபா 8,724,248 தொகையும் மற்றும் 2024 ஆண்டிற்காக ரூபா 1,999,534 தொகையுமாக ரூபா 11,941,478 இற்கான தொகையொன்று	குறிப்பிட்ட தொகையை அறவீடு செய்வதற்கு வழக்குத் தாக்கல் செய்வதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என.	நிலுவை வருமானம் விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது.

(ஈ)	சேவையை விட்டுச் செல்லும் உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய தொகைகளை உரிய முறையில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையால் 2021 ஆண்டில் ரூபா 1,558,240 இற்கான தொகையொன்றுக்கு உடன்படிக்கை மேற்கொண்டு வெளிநாடு சென்றுள்ள உத்தியோகத்தர் ஒருவரிடம் அறவிடப்பட வேண்டிய தொகை மற்றும் எதுவித அறிவித்தலும் மேற்கொள்ளாமல் சேவையை விட்டு விலகிச் சென்றுள்ள 24 உத்தியோகத்தர்களிடம் 01 வருடம் முதல் 09 வருடங்கள் வரையான காலத்துக்குரிய ரூபா 2,504,759 தொகையும், அதேபோல் 2024 ஆண்டின் சேவையை விட்டுச் சென்ற ஐந்து நபர்களிடம் ரூபா 345,221 தொகையென அறவிடப்பட வேண்டிய மீதிகள் என காணப்பட்டன.	தற்போது சேவையை விட்டு அகன்று செல்லும் உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய தொகைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	ஊரியர்களிடம் பெற வேண்டிய தொகைகளை தாமதம் இன்றி அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இண்ங்காமைச் சந்தர்ப்பங்களின் போது அதற்குரிய கணக்காய்வு அவதானிப்புக்கள் இந்தத் தலைப்பின் கீழ் காட்டப்பட வேண்டும்.

சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	**இணங்காமைகள்**	**முகாமைத்துவத்தின் கருத்துரை**	**பரிந்துரை**
(அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவை			
(i) அத்தியாயம் V இன் பந்தி 2.1	அரச சேவையொன்றிற்கு புறம்பான சேவையொன்றுக்காக உத்தியோகத்தர் ஒருவர் விடுவிக்க முடியுமாவது, நியமன அதிகாரியின் அங்கீகாரம் மற்றும் அந்தக் கூட்டுத்தாபனம் அல்லது சபை நிறுவப்பட்ட சட்டத்தினால் விதிக்கப்பட்டுள்ள இணக்கப்பாடு பெற்றுக்கொள்ள வேண்டிய ஏனைய அதிகாரி ஒருவர்	இந்த உத்தியோகத்தர் தொடர்பாக ஆரம்ப விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு தகுதிகாண் சேவைக் காலத்தில் சேவை முடிவுறுத்தப்பட்டது என.	தாபனக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும் என.

		காணப்படின் அவரின் அங்கீகாரத்துடன் மாத்திரம் இயலுமாக உள்ள போதிலும், இலங்கை கடற்படையின் லுதினன் கமான்டர் பதவியில் கடமையாற்றிய உத்தியோகத்தர் ஒருவருக்கு அரச கூட்டுத்தாபனம் ஒன்றில் கடமை மேற்கொள்வதற்காக தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ அரசாங்க சேவையிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்காத போது 2021 ஆகஸ்ட் 02 திகதி இலங்கை மன்றத்தின் பணிப்பாளர் (நிருவாகம்) பதவியில் கடமையாற்றுவதற்காக ஏற்றுக்கொண்டிருந்தார்.		
(ii)	அத்தியாயம் vii இன் பிரிவு 12.2.5	முறையான நியமன அதிகாரியினால் அவர் முறைப் பிரகாரம் நியமனம் செய்யப்பட்டால் அன்றி கடமைகளை அணவல் செய்யும் உத்தியோகத்தர் ஒருவருக்கு பதில் கடமைச் சம்பளம் எனப்படும் எதுவித மேலதிக ஊதியமும் பெற்றுக்கொள்ள முடியாதென அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், மன்றத்தின் பணிப்பாளர் (கல்வி) பதவியில் கடமை அணவல் செய்வதற்காக 2021, 2022, 2023 ஆண்டுகளின் போது ரூபா 599,979 இற்கான தொகையொன்று பதில் கடமைப்படி என முறையான அங்கீகாரம் இன்றி செலுத்தப்பட்டிருந்தது.	தற்போது முன்னைய பணிப்பாளர் (கல்வி) இறந்துள்ளமையால், இது தொடர்பாக தொழில் ஆணையாளரின் அறிவுரையின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	இந்தத் தொகையை பொறுப்பான தரப்பினரிடம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(iii)	அத்தியாயம் xii இன் பிரிவு 14.3.3	முழுமையான சம்பளத்துடனான கல்வி விடுமுறை தொடர்பான கோரிக்கைகள் தாபனப் பணிப்பாளருக்கு சமர்ப்பித்து அங்கீகாரம்	முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தின் படி இந்த உத்தியோகத்தருக்கு விடுமுறைக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததெனவும்	தாபனக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும்.

	பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், நிறுவனத்தில் கடமையாற்றும் இரண்டு விரிவுரையாளர்களுக்காக 2021 முதல் 2023 வரை 02 வருடங்களும் 06 மாதங்களுக்குமாக முழுச் சம்பளத்துடனான கல்வி விடுமுறை வழங்கப்பட்டு ரூபா 8,030,919 இற்கான சம்பளம் செலுத்தியிருந்த போதிலும், ஒரு விரிவுரையாளர் உரிய தகைமைகளை பூர்த்தி செய்தமைக்கான உறுதிப்படுத்தல்கள் காணப்படவில்லை.	, எதிர் காலத்தில் இவ்வாறான சந்தர்ப்பங்களில் தாபனப் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என.	
(iv) அத்தியாயம் xii இன் பிரிவு 14.6	நிறுவனத்தின் இரண்டு விரிவுரையாளர்களுக்கு 02 வருடங்களும் 06 மாத காலத்திற்கான முழுச் சம்பளத்துடனான கல்வி விடுமுறைக்கான சேவையாற்ற வேண்டிய கட்டாய சேவைக் காலத்திற்காக உடன்படிக்கையொன்று மேற்கொண்டிருக்காமையால் ஒரு விரிவுரையாளர் தேவையான வசதிகளை பெற்றுக்கொண்ட போதிலும், நிறுவனத்தில் கடமையாற்றாமல் 2023 நவம்பர் 23 திகதி சேவையிலிருந்து அகன்றுள்ளார்.	உடன்படிக்கையில் கையொப்பமிடல் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது என.	தாபனக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும்.
(ஆ) 2001.03.137 இலக்கங் கொண்ட பணிப்பாளர் சபைத் தீர்மானம்	அனைத்து விரிவுரையாளர்களும் மாதாந்த முன்னேற்ற அறிக்கைகள் பேணிச் செல்ல வேண்டிய போதிலும், 2024 ஆண்டின் போது மாதாந்த முன்னேற்ற அறிக்கைகள் பேணிச் சென்றிருக்கவில்லை.	எதிர் காலத்தில் காலாண்டிற்கு ஒருமுறை இந்த அறிக்கை பெற்றுக்கொள்ளப்படும் என.	பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் படி செயற்பட வேண்டும்.
(இ) 1995 செப்தம்பர் 07 திகதிய 8/887	மூன்றாம் நிலை தர மற்றும் தொழிற் பயிற்சி	இது தொடர்பாக தேவையான	1990 இன் 20 இலக்க மூன்றாம்

இலக்கம் கொண்ட வர்த்தமானி	பாடநெறிகள் நடாத்தப்படுகின்ற நிறுவனங்கள், மூன்றாம் தர மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவில் (TVEC) தமது நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்ற பாடநெறிகளை பதிவு செய்து, வருடாந்தம் பதிவு செய்தலை புதுப்பிக்க வேண்டும். மன்றத்தினால் 2024 திசெம்பர் 31 திகதி அளவிலும் நடாத்தப்படுகின்ற பாடநெறிகளுக்காக தற்காலிக பதிவு செய்தல் ஒன்று மாத்திரம் பெற்றுக்கொண்டிருந்தது.	நடவடிக்கைகள் விரைவாக நிறைவேற்றப்பட்டு வருகின்றது என.	நிலை மற்றும் தொழில் கல்வி சட்டத்தின் பிரிவு 15 இன் படி செயற்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 132,402,966 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 8,806,726 தொகையாக காணப்பட்டது. அதன்படி, நிதி விளைவுகளில் ரூபா 123,596,240 இற்கான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்காக ரூபா 90 மில்லியனிற்கான திறைசேரி ஏற்பாடுகள் கிடைக்கப் பெறல், ஏனைய வருமானங்கள் ரூபா 19,929,590 இனால் அதிகரித்தல், பயிற்சி மற்றும் கல்விசார் செலவுகள் ரூபா 14,950,888 இனால் குறைவடைதல் பிரதானமான காரணமாக இருந்தது.

3 செயற்பாட்டு மீளாய்வு

3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
இலங்கை மன்றத்தின் பணிப்பாளர் (கல்வி) பதவியில் கடமையாற்றிய உத்தியோகத்தர் 2020 ஆகஸ்ட் 28 திகதி முதல் நிரந்தமாக ஓய்வு பெறச் செய்திருந்தமையால் இலங்கை மன்றத்திற்கு எதிராக அந்த உத்தியோகத்தினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் 2023 ஜுலை 07 திகதிய வழக்குத் தீர்ப்பின் படி அவருக்கு உரித்தான அனைத்து நிலுவைச் சம்பளங்களும் செலுத்துவதற்கு மற்றும் பணிப்பாளர் (கல்வி) பதவியில் மீண்டும்	இந்த முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்துடன் எடுக்கப்பட்ட தீர்மானம் எனவும், தொழில் நீதிமன்றத்தில் இருந்து கிடைத்த தீர்ப்பின் படி இந்த அலுவலகள் இணக்கப்பாடொன்றின் மீது மேற்கொள்ளப்பட்டது எனவும்.	முகாமைத்துவத்தினால் தீர்மானங்கள் எடுக்கும் போது சட்டரீதியாக மற்றும் வெளிப்படைத் தன்மையுடன் தீர்மானம் எடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சேவையாற்றுவதற்காக நிறுவுதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மன்றத்தின் பலவீன முகாமைத்துவத்தின் காரணமாக நிறுவனத்திற்காக சேவை ஆற்றாத 2019 ஏப்ரல் முதல் 2023 நவம்பர் வரையான நிலுவைச் சம்பளம், ஊழியர் சேமலாப நிதியத்திற்காக பங்களிப்பு தொகை, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியப் பங்களிப்பு தொகை, சட்டத்தரணி கட்டணம் என முறையே ரூபா 4,041,301 தொகை, ரூபா 1,132,573 தொகை மற்றும் ரூபா 135,908 தொகை மற்றும் ரூபா 390,466 தொகையாக கூட்டுத்தொகை ரூபா 5,700,250 இற்கான மேலதிக செலவொன்று மேற்கொள்வதற்கு நேரிட்டிருந்தது.		

3.2 முகாமைத்துவ திறமையின்மை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
மூலனத மானியமாக கிடைத்திருந்த ரூபா 90 மில்லியன் தொகையில் முடிவுற்ற வேலைகளுக்காக சுமார் ரூபா 44 மில்லியன் தொகை செலுத்தப்பட்டதென 2025 மே 14 திகதி கணக்காய்விற்கு அறிவித்த போதிலும், 2025 பெப்ரவரி 20 திகதி அமைச்சுச் செயலாளருக்கு அனுப்பப்பட்ட 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மூலதன மானியங்கள் தொடர்பான முன்னேற்றத்தின் படி அனைத்துச் செயற்திட்டங்களும் பூர்த்தி செய்யப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டதென அறிவிக்கப்பட்டிருந்தது.	2024 ஆண்டின் மூலதன மானியம் என ரூபா 90 மில்லியனிற்கான தொகையொன்று மாத்திரம் நிறுவனத்திற்கு கிடைத்திருந்ததெனவும், முடிவடைந்த வேலைகளுக்காக ரூபா 44 மில்லியன் செலுத்தப்பட்டதெனவும், ஒப்பந்த வேலைகள் வழங்கப்பட்டு வேலைகள் முடியும் வரை ஏனைய தொகை அட்டுறுச் செலவுகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது என.	சரியான மற்றும் நாளதுவரையான தகவல்கள் வழங்குதல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக காணப்பட்டதுடன், சரியான தகவல்கள் வழங்கப்பட வேண்டும்.

3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
கட்டிட வளாகத்தின் மாதாந்த வாடகை ரூபா 225,000 தொகை மற்றும் அலைவரிசையின் மாதாந்த வாடகை ரூபா 500,000 தொகை என தீர்மானிக்கும் போது அரச பெறுமதி	எதிர் காலத்தில் இவ்வாறான நிலைமையொன்று ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்கப்படும் என.	வாடகைக்கு கொடுக்கும் போது முறையான செய்முறையொன்று கடைபிடிக்கப்பட

மதிப்பீட்டுப் பெறுமதியும், சந்தையில் தற்போது நிலவும் கூறுவிலைகளை மதிப்பீடு செய்து மாதாந்த வாடகை தீர்மானிக்கப்பட்டிருக்காததுடன், இந்த கட்டிடம் மற்றும் அலைவரிசையை வடகைக்கு கொடுக்கும் போது திரைக்கூடம் மற்றும் அதில் காணப்படுகின்ற உபகரணங்களின் பாதுகாப்பு, உளமைக்காக பாதுகாப்பு வைப்பொன்று (Security Bond) பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.		வேண்டும்.

3.4 செயற்திட்டங்கள் மற்றும் மூலதன வேலைகளில் தாமதங்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கேட்போர் கூடம் மறுசீரமைத்தல், புதிய ஆடை மாற்றும் அறை மற்றும் பாதுகாப்பு ஓய்வறையை விரிவாக்குவதற்காக கட்டிடத் திணைக்களத்துடன், ஏற்படுத்தியிருந்த இணக்கப்பாட்டின் படி மதிப்பீட்டுப் பெறுமதியில் 25 சதவீதம் ஆகிய ரூபா 3,628,225 தொகை 2024 ஒக்தோபர் 29 திகதி செலுத்தப்பட்டிருந்ததுடன், மீதியாகிய ரூபா 10,071,775 இற்கான தொகைக்காக 2024 திசெம்பர் 31 திகதிய 596355 இலக்கம் கொண்ட காசோலையின் மூலம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டதென குறிப்பிட்டு வெற்றுக் காசோலையொன்றாக நிறுவனத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததுடன், 2025 மார்ச் 31 திகதி அளவிலும் இந்த கருமங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.	கட்டிடத் திணைக்களத்திற்கு முற்பணத் தெகை மாத்திரம் செலுத்தப்பட்டுள்ளதெனவும், அந்த திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீடு மாற்றமடைந்திருத்தல் புதிய பெறுகை வழிகாட்டல் கடைபிடிக்க நேரிட்டமையால் தாமதமொன்று ஏற்பட்டதென.	திட்டமிடப்பட்ட செயற்திட்டங்கள் குறிப்பிட்ட காலப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். கருங்கள் பூர்த்தி செய்யும் வரை காசோலைகள் எழுதி தடுத்து வைக்கப்படக் கூடாது.
(ஆ)	திரைக்கூடம் நிர்மாணித்தல் தொடர்பான கட்டிடக் கலை அலுவல்களுக்காக உசாத்துணை சேவைகளுக்காக 2019 ஆண்டில் ரூபா 1,049,124 இற்கான தொகையொன்று செலுத்தியிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதி வரை அந்தச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.	அப்போது காணப்பட்ட முகாமைத்துவ சபையின் மூலம் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி திரைக்கூட நிர்மாணித்தல் தொடர்பாக கட்டிடக் கலை அலுவல்கள் மற்றும் உசாத்துணை சேவை பெறப்பட்ட போதிலும், ஏற்பாடுகளை பெற்றுக்கொள்ள முடியாமையினால் திரைக்கூட	நிறுவனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக செய்பணிகள் திட்டமிடப்பட வேண்டிய போதிலும், உரிய முறையில் செயற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	நிர்மாண வேலை செயற்திட்ட திட்டமிடலுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டு காணப்பட்டது.	

3.5 பெறுகை முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
கட்டிடத் திணைக்களத்தினால் வலுத் தன்மை தொடர்பாக சிக்கல்கள் காணப்பட்ட காரணத்தினால் கேட்போர் கூடத்தின் நிர்மாண வேலை அலுவல்களை ஏற்றுக்கொள்ள மறுத்திருந்ததுடன், 2025 பெப்ரவரி 03 திகதி அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தினால் தேசிய கட்டிட ஆய்வு அமைப்பினால்(NBRO) கட்டிடத்தை உறுதித் தன்மை தொடர்பாக பரிசோதனையொன்று மேற்கொள்ள வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், கணியச் சிட்டை (BOQ) மற்றும் வரைவு தயாரித்தலுக்காக ரூபா 2 மில்லியன் தொகையொன்று இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் வேண்டுகோளின் படி மன்றத்தினால் மீளாய்வாண்டின் நடைமுறை வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்தது.	தொடர் நிர்மாண வேலை அலுவல்கள் நிறுத்தப்பட்டிருந்த இந்த கட்டிடத்தில் பொருத்தத் தன்மையினை உறுதிப்படுத்துவதற்காக தேசிய கட்டிட ஆய்வு அமைப்புடன் அறிக்கையொன்று அழைக்கப்பட்ட போதிலும், அந்த அறிக்கை மற்றும் ஏனைய ஆவணங்கள் தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு சமர்ப்பித்து அங்கீகாரத்தின் பின்னர் பாதீட்டில் உட்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என.	முறையான மதிப்பீடொன்று மேற்கொண்டு ஒப்பந்த அலுவல்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

3.6 ஒப்பந்த நிருவாத்தின் குறைபாடுகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டளவில் ரூபா 3,262,424 தொகை தடுத்து வைத்தில் பணம் என காட்டப்பட்டிருந்ததுடன், அதில் 2018 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரை ரூபா 2,095,751 இற்கான தீர்க்கப்படாத மீதியொன்று காணப்பட்டது.	ஒப்பந்தக்காரரினால் மேற்கொள்ளப்பட்ட கருமங்களில் பண்புசார் தன்மை தொடர்பான சிக்கல்கள் காணப்பட்டமையால், தடுத்து வைத்தல் பணம் விடுவிக்க முடியாமல் உள்ளது என.	ஒப்பந்த அலுவல்களில் காணப்படுகின்ற குறைபாடுகளை தீர்த்து தடுத்து வைத்தல்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.7 மனிதவள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
2021 ஆகஸ்ட் 02 திகதி இலங்கை மன்றத்தின் பணிப்பாளர்(நிருவாகம்) கடமையை ஏற்றுக்கொண்டிருந்த உத்தியோகத்தர் இலங்கை கடற்படை	இந்த உத்தியோகத்தரின் தகுதிகாண் காலத்தினுள் சேவை முடிவுறுத்தப்பட்டதெனவும்,	ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும்.

சேவையில் 2021 நவம்பர் 05 திகதி ஓய்வு பெற்றிருந்ததுடன், 2021 ஆகஸ்ட் 02 திகதி முதல் 2021 நவம்பர் 05 திகதி வரையான காலப் பகுதியில் மன்றம் மற்றும் இலங்கை கடற்படை ஆகிய இரண்டு நிறுவனங்களிலிருந்து சம்பளங்கள் மற்றும் படியாக முறையே 495,759 தொகை மற்றும் ரூபா 319,669 தொகை பெறப்பட்டிருந்தது.	தற்போது வழக்கு அலுவலொன்று காணப்படுகின்றது என.	

4 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 செயல் நடவடிக்கைத் திட்டம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
2024 ஜனவரி 09 திகதி அங்கீகரிக்கப்பட்ட கல்விப் பிரிவின் செயல் நடவடிக்கைத் திட்டம் 2024 நவம்பர் 12 திகதி திருத்தப்பட்டிருந்ததுடன், அவற்றில் 52 பாடநெறி வகைகள் அகற்றப்பட்டு அந்த திருத்திய திட்டத்தில் அடங்கியுள்ள 19 வகையான பாடநெறிகள் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருக்காத போதிலும், அதில் அடங்கியிருக்காத 38 வகையான பாடநெறி வகைகள் நடாத்தப்பட்டிருந்தது.	கல்விப் பிரிவில் காணப்படும் 04 விரிவுரையாளர்களினால் நடாத்தக் கூடிய பாடநெறிகள் மற்றும் செயலமர்வுகள் மாத்திரம் இந்த திருத்திய செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தப்பட்டதெனவும், இங்கு அனேகமான பாடநெறிகள் மற்றும் செயலமர்வுகளுக்காக காணப்படும் கேள்விகள் மற்றும் நாட்டில் நிலவுகின்ற நிலைமையில் காரணமாக விற்பனை செய்ய முடியாமல் காணப்படுவதுடன், அரச துறையில் பயிற்சி மதிப்பீடுகள் வெட்டபபட்டிருந்தமையால் அரச துறையில் பயிற்சி வழங்கல் குறைவடைதலும் காரணமாக இருந்தது.	செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க திட்டமிடப்பட்ட கருமங்கள் நிறைவேற்றப்பட வேண்டும்.